## 2.96 ஒரு பணி விதி அமுலாக்கம் – துறைத் தேர்வு தேர்ச்சி பெறாதவர்களுக்கு தேர்ச்சி பெற 11.4.1989 வரை கால அவகாசம் அளித்தல்

---

ஊரக வளர்ச்சித் துறை

அரசாணை (நிலை) எண். 485 நாள் : 19.6.1987

படிக்க :

1. அரசாணை (நிலை) எண். 585 ஊரக வளர்ச்சித் துறை நாள். 12.4.84
2. அரசாணை (நிலை) எண். 588 ஊரக வளர்ச்சித் துறை நாள். 12.4.84
3. அரசாணை (நிலை) எண். 349 பணிமற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள். 12.4.84
4. அரசாணை (நிலை) எண். 325 ஊரக வளர்ச்சித் துறை நாள். 26.4.85
5. தமிழ்நாடுஅரசு ஊர்நல அலுவலர்கள் சங்கத்தின் 4.12.86 நாளிட்ட மனு.
6. தமிழக அரசு ஊர்நல அலுவலர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளரின் 16.2.87 நாளிட்ட கடிதம்
7. ஊரக வளர்ச்சி இயக்குநரின் 9.3.87 நாளிட்ட கடித எண். 19053/டி2/87

**ஆணை**

பார்வை 1 –ல் கண்ட அரசு ஆணையில் ஊரக வளர்ச்சித் துறையில் ஒரு பணி விதி உருவாக்கப்பட்டு 1.6.79 முதல் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. பார்வை 2ல் கண்ட அரசு ஆணைப்படி, ஊர்நல அலுவலர்கள் பற்றிய பணிவிதி நீக்கப்பட்டு பார்வை 3–ல் கண்ட அரசு ஆணைப்படி, ஊர்நல அலுவலர்களின் பணி தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர்களின் பணி விதிகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

2. ஊர்நல அலுவலர்கள் அமைச்சுப் பணியாளர் பணி விதிகளின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதால் அமைச்சுப் பணியாளர்களுக்கென ஊரக வளர்ச்சித் துறையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள துறைத் தேர்வுகளில் ஊர்நல அலுவலர்கள் தேர்ச்சி பெற வேண்டுமென ஆணையிடப்பட்டது. பார்வை 4–ல் கண்டுள்ள அரசாணையில் , துறைத் தேர்வுகளில் தேர்வு பெற்ற ஊரக வளர்ச்சித் துறையில் வகிக்கும் பதவிகளில் பணிவரன்முறை செய்யப்படல் மற்றும் பதவி உயர்வுக்கு தகுதி பெறுதல் ஆகியவற்றிற்காக சில நிபந்தனைகளுடன் மூன்றாண்டு காலம் 12.4.84 முதல் ஊர்நல அலுவலர்களுக்கு அவகாசம் அளிக்கப்பட்டது.

3. மேற்கண்ட ஆணையில் 1.6.79 –க்கு முன்பு பதவியில் சேர்ந்தவர்களுக்கு தற்பொழுதுள்ள பதவிகளில் தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்கப்பட்டது. ஆனால், பதவி உயர்வு மட்டும் துறைத் தேர்வு என நிர்ணயிக்கப்பட்டு ஆணையிடப்பட்டது. பதவி உயர்வுக்காக தேர்வுகளில் தேர்ச்சி பெற இவர்களுக்கு மூன்றாண்டு கால அவகாசம் அளிக்கப்பட்டது. 1.6.79 முதல் 12.4.84 முடிய இடைப்பட்டுள்ள காலத்தில் பதவியில் சேர்ந்தவர்களுக்கு , தங்களுடைய பதவியில் தொடர்ந்து பணியாற்றவும் மேலும் பதவி உயர்வுக்கும் மூன்றாண்டு கால அவகாசம் அனுமதிக்கப்பட்டது. ஆனால் துறைத் தேர்வில் மூன்றாண்டுகளுக்குள் தேர்ச்சி பெறாவிட்டால் அவர்கள் தங்கள் பதவிகளிலிருந்து 1.6.79 ல் வகித்த பதவிக்கு பணி இறக்கம் செய்யப்படுவீர் , 12.4.84 க்குப் பிறகு பதவியில் சேர்ந்தவர்களுக்கும் மேற்கண்ட ஆணை பொருந்தும் என ஆணையிடப்பட்டது. மேற்கண்ட மூன்றாண்டு கால அவகாசம் 11.4.87 ல் முடிவடைந்து விட்டது.

4. தஞ்சாவூர் மாவட்ட ஊர்நல அலுவலர்கள் சங்கம் மேற்கூறியவாறு அளித்துள்ள மூன்றாண்டு கால அவகாசம் போதுமானதுமில்லை எனவும், துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற மேலும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் அளிக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது. ஊர்நல அலுவலர்கள் சங்கம் மேற்படித் துறைத் தேர்வில் தேர்ச்சி பெற தங்களுக்கு மேலும் ஐந்தாண்டு காலம் அவகாசம் வேண்டுமென கேடடுக் கொண்டுள்ளது. ஆனால் அவகாசம் அளிப்பது தங்களுக்குப் பாதகமாகவும், ஒருதலைப் பட்சமாகவும் அமையும் என அமைச்சுப் பணியாளர்கள் சங்கம் இக்கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. மேற்படித் துறைத் தேர்வில் தேர்ச்சி பெற ஊர்நல அலுவலர்களுக்கு மேலும் மூன்றாண்டு காலம் அவகாசம் அளிக்கலாம் என ஊரக வளர்ச்ச் இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார்கள்.

5. இச்செயற்குறிப்பிணை அரசு கூர்ந்தாய்வு செய்தது . அளிக்கப்பட்ட அவகாசத்தை மேலும் நீட்டிக்க வேண்டுமா என்பது குறித்து கோரிக்கைகளும் , எதிர்ப்பும் பெறப்பட்டுள்ளன. ஒருமுறை தவணை அளிக்கப்பட்டால் அந்த சலுகையை நீட்டிப்பது நிர்வாக நலனுக்கு உகந்தது அல்ல. அதே சமயம் ஒரு பணி விதிகள் என்ற பெயரில் அடைந்த நிர்வாக சீர்திருத்தம் உச்ச நீதி மன்றம் வரை சோதனைக்குட்பட்டு பின்னர் ஏற்கப்பட்டு , அண்மையில்தான் முழுமையாக அமுலாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதுவரை ஒரு நிச்சயமில்லாத நிலை இருந்து வந்தது. அந்த சூழ்நிலையில் தேர்வில் தகுதி பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற போதிய முனைப்புடன் சிலர் முழு முயற்சி செய்யாதிருக்கலாம்

என்பதைக் கருத்தில் கொண்டு ஊர்நல அலுவலர்களுக்கு தேர்வுகளில் தேர்ச்சி பெற்று உரியத் தகுதிகள் பெற்றுக் கொள்ள அவர்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கொடுப்பது அதை மறுப்பதை விட உகந்தது என்பதைக் கருத்தில் கொண்டும் கீழ்க்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுடன் ஊர்நல அலுவலர்கள் துறைத் தேர்வில் தேர்ச்சி பெற 12.4.87 க்கு பிறகு அத்தேதியிலிருந்து மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு மட்டும் அதாவது 11.4.89 வரை அவகாசம் கொடுத்து நீட்டித்து அரசு ஆணையிடுகின்றது.

அ. சலுகைக் காலத்தில் உரியத் துறைத் தேர்வு தேர்ச்சி பெறவில்லை என்ற காரணத்திற்காக எந்த ஊழியரும் பதவி இறக்கம் செய்யப்படமாட்டார்கள்.

ஆ. அதே சமயம் சலுகைக் காலத்தில் பதவிக்குரிய தகுதியில்லாததோர் புதிய பதவி உயர்வு அளிக்கப்படமாட்டார்கள்.

இ. எக்காரணம் கொண்டும் 11.4.89 க்கும் பின் இச்சலுகை நீட்டிக்கப்படமாட்டாது .

7. இந்த ஆணைத்தொடர்பாக தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகளுக்கு திருத்தம் செய்ய பணியாளர் மற்றும் நிர்வாகச்சீர்திருத்தத் துறைக்கு தக்க வரைவுத் திருத்தங்கள் அனுப்புமாறு ஊரக வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**வி. சந்திரலேகா**
ஆணையர் மற்றும் செயலாளர்